**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110268

1. District : Theni மாவட்டம் PS : V&AC, Theni காவல்நிலையம் Year : 2020 ஆண்டு FIR No : 07/2020 மு.த.அ. எண் Date : 15.12.2020 நாள்

2. (i) Act சட்டம் : PC Act 1988 as amended by Sections பிரிவுகள் : 7
(ii) Act சட்டம் : PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் : Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் : Date from நாள் முதல் : 07.12.2020, 08.12.2020 and 14.12.2020 Date to நாள் வரை :
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் : Time to நேரம் வரை :
(b) Information Received at PS Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 15.12.2020 Time நேரம் : 0900 Hrs
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : Time நேரம் :

4. Type of Information Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Computer typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS : About 25 kms South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி : O/o the Asst. Engineer (Rural) Chinnamanur, Theni District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Chinnapandi குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : Kannan தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 1988 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : No. 234/9, Muthumariamman Kovil Street, Muthulapuram (P), Paramathevanpatty, Uthamapalayam (Tk), Theni (Dt) முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Boominathan, EB AE (Rural) Chinnamanur, Uthamapalayam (Tk), Theni (Dt)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Computer Typed separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................. பதவி .................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..................
Rank: நிலை .................. No. எண் ..................

12. F.I.R. contents (Attach separate sheet if required):
(முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவைப்படினில் தனித்தாளில் இணைக்கவும்)

தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2020-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 15.12.2020-ம் தேதி 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, பரம்தேவன்பட்டியில் வசித்துவரும் திரு.கண்ணன் மகன் திரு.K.சின்னப்பாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த தட்டச்சு எழுத்துமூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேலேகண்ட முகவரியில் எனது தாயாருடன் இருந்து கொண்டு கூலிவேலை செய்துவருகிறேன். நான் 9-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தகப்பனார் திரு.கண்ணன் கடந்த 12 வருடங்களுக்கு முன்பு உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார். எனது தகப்பனார் இறந்தபிறகு எனது அம்மா பொன்னுத்தாய்க்கு சொந்தமான பரமத்தேவன்பட்டி, கிழக்குத்தெருவில் உள்ள இடத்தில் பிரதம மந்திரி வீடுகட்டும் திட்டத்தில் (கச்சா வீடு) வீடு ஒன்றை 10 வருடங்களுக்கு முன்பு கட்டினோம். நாங்கள் கட்டிய வீட்டிற்கு இன்றுவரை மின்இணைப்பு வாங்கவில்லை. நான் கடந்த 03.12.2020-ம் தேதி எங்களது வீட்டிற்கு புதிய மின்இணைப்பு வேண்டி பரமத்தேவன்பட்டி தனியார் கணினி மையத்தில் எனது தாயார் பொன்னுத்தாய் பெயரில் புதிய மின்இணைப்பிற்காக விண்ணப்பித்தேன். மேற்படி புதிய மின்இணைப்பு வேண்டிய விண்ணப்பத்தினை கணினியில் இருந்து எடுத்துக்கொண்டு, 04.12.2020-ம் தேதி சின்னமனூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று A.E. பூமிநாதன் அவர்களிடம் கொடுத்தேன். அவர் விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டு இடத்தை பார்த்துவிட்டு சொல்வதாகக் கூறினார். நான் விண்ணப்பத்தை கொடுத்துவிட்டு வேலைக்கு சென்றுவிட்டேன். அவர் அன்றே எங்கள் ஊருக்கு வந்து வீட்டை பார்வையிட்டுவிட்டு எனது அம்மாவிடம் என்னை 07.12.2020 திங்கட்கிழமை வந்து அவரது அலுவலகத்தில் வந்து பார்க்குமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். என் அம்மா பொன்னுத்தாய் என்னிடம் தகவல் சொல்ல, நான் 07.12.2020 திங்கட்கிழமை காலை சுமார் 09.00 மணிக்கு சின்னமனூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று A.E பூமிநாதன் அவர்களை பார்த்தேன். அப்போது அவர், உனக்கு லைன் கொடுப்பதற்கு EB போஸ்ட்டிலிருந்து வீடு தூரமாக உள்ளது. அதற்கு ரூ.7,000/- செலவாகும் என்று கூறினார். நான் அவரிடம் சார் இது கவர்மெண்ட்க்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் கவர்மெண்ட்டுக்கு கட்ட வேண்டிய பணம் ரூ.2,818/- உடன் சேர்த்து மீதி பணம் எனக்காகும் செலவு என்றும், மொத்தம் ரூ.7,000/- கொடுத்துவிடு, உனது வேலையை முடித்துதருகிறேன் என்று கூறினார். நான் அவரிடம் நான் கூலி வேலை பார்க்கிறேன் என்னால் அவ்வளவு பணம் கட்டமுடியாது என கூறினேன். பணம் ரெடி பண்ணி கொண்டு வந்தால்தான் உனக்கு வேலையாகும் என்று சொல்லி என்னை அனுப்பிவைத்துவிட்டார். மீண்டும் நான் 08.12.2020-ல் A.E-யை பார்க்க சின்னமனூர் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று காலை சுமார் 09.30 மணியளவில் A.E. பூமிநாதன் அவர்களை சந்தித்து என்னால் அவ்வளவு பணம் கட்ட முடியாது, நான் கூலி வேலை செய்கிறேன் என்று கூறினேன். அதற்கு அவர், தான் விடுப்பில் செல்வதால் அரசுக்கு கட்டவேண்டிய பணத்தை தனியாக

கட்டிவிட்டு ரூ.3,000/ தனக்காக கொடுக்கும்படி 11.12.2020-ம் தேதி அலுவலகத்திற்கு கொண்டுவருமாறு கூறினார். மீண்டும் 11.12.2020-ம் தேதி சுமார் 10.30மணிக்கு நான் உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று A.E அவர்களை சந்தித்து என்னால் பணம் புரட்ட இயலவில்லை என்று சொல்வதற்காக சென்றபோது, A.E பூமிநாதன் ரீடிங் சென்றுவிட்டதால் அன்று அவரை சந்திக்கவில்லை. 14.12.2020-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு சின்னமனூர் A.E அலுவலகத்திற்கு சென்று A.E பூமிநாதன் அவர்களை சந்தித்து எனது மின் இணைப்பு தொடர்பாக கேட்டேன். அதற்கு அவர், நான் கேட்ட பணம் ரூ.3000/ கொண்டு வந்துள்ளாயா என்று கேட்டார். நான் அவரிடம் என்னால் கொடுக்க முடியாது. கொரனா சமயம் என்பதால் வேலை எதுவும் இல்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் ரூ.300 குறைத்துக்கொண்டு ரூ.2,700/-ஐ கொண்டுவந்து 15.12.2020-ம் தேதி உதவி மின்பொறியாளர் அலுவலகத்திற்கு வந்து அவரிடம் கொடுக்குமாறு கூறி, என்னை அங்கிருந்து அனுப்பிவிட்டார். நானும் வீட்டிற்கு வந்துவிட்டேன். பின்னர் நான் யோசித்து பார்த்து, என்னுடைய கஷ்டத்தை நினைத்தும், வருமானம் ஒன்றுமில்லை என்பதாலும் மனம் வருந்தி என்னிடம் லஞ்சம்கேட்ட பூமிநாதன் அவர்களுக்கு புதிய மின்இணைப்பு பெறுவதற்கு லஞ்சமாக கொடுத்து பெறுவதற்கு எனக்கு விருப்பமில்லை. அதனால், எனது வேலையை உடனே முடித்து கொடுப்பதற்காக என்னிடம் ரூ.2,700/-ஐ லஞ்சமாக கேட்ட உதவி மின்பொறியாளர் திரு.பூமிநாதன் மீது நடவடிக்கை எடுக்ககேட்டு, இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இத்துடன், தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தில் கணினியில் பதியப்பட்ட விண்ணப்ப மனுவையும் அதனுடன் இணைக்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பு, பார்ம் A,B,C, வீடு வரி இரசீது, எனது அம்மாவின் ஆதார் அட்டை நகல்களையும், உதவி மின்பொறியாளர் பூமிநாதன் என்பவர் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.2,700/- மற்றும் மின்இணைப்பிற்காக அரசுக்கு கட்டவேண்டிய பணம் ரூ.2818/-ம் கொண்டுவந்துள்ளேன். மேற்படி எனது வீட்டிற்கு புதிய மின் இணைப்பு கொடுப்பதற்க லஞ்சம் கேட்ட சின்னமனூர் உதவி மின்பொறியாளர் பூமிநாதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.இப்படிக்கு Sd/-xxxxxx (K.சின்னப்பாண்டி, 15.12.2020)

**Sir, Received the complaint on 15.12.2020 at 07.00 Hrs. A confidential verification was conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, I am registering a case in Theni V&AC Cr.No.07/2020, u/s 7 of P.C Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018, on 15.12. 2020 at 09.00 hrs. Sd/-XXXX (R.Geetha, Inspector of Police, V&AC, Theni).**

**Original FIR along with Original complaint of Tr.K.Chinnapandi, S/o. Kannan, No.234/9.Muthumairammankovil Street, Paramathevanpatti, Muthulapuram, Uathamapalayam Taluk, Theni District is sent to the Chief Judicial Magistrate/Special Judge for PC Act Cases, Theni District.**

Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni District.